யாழ்ப்பாணம்
நல்லூர் ஓ நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை (20-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 227

# பெண்கைதிகள் உண்ணாவிரதம் வெலிக்கடை சிறையில் தொடர்கிறது

## கோரிக்கைகள் தொடர்பாக பீரிஸுடன் கூட்டணி பேச்சு

கொழும்பு, ஜூலை 20

**வெலிக்கடைச் சிறையில் தமிழ்ப் பெண் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் நேற்று சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளை நேரில் பார்வையிட்டனர். அத்துடன் அமைச்சர் பீரிஸுடன் அவர்கள் தொடர்புகொண்டு கைதிகளின் கோரிக்கைகள் குறித்து பிரஸ்தாபித்தனர்.**

7 மாதக் கைக்குழந்தையின் தாயாரான திருமதி ஆர். ரேணுகா மற்றும் 4 மாதக் கைக் குழந்தையின் தாயாரான திருமதி எஸ். திருமகள் உட்பட 40 பெண் தமிழ் அரசியல் கைதிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கி உள்ளனர்.

இவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

★ போதைப் பொருள் பாவனை, விபசாரம் போன்ற கிறிமினல்குற்றங்கள்தொடர்பான கைதிகளுடன் தமிழ் கைதிகளைத் தடுத்து வைக்காது அவர்களைத் தனியே தடுத்துவைக்க வேண்டும்.

★ தமிழ்பேசும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

★ உறவினர்களுடன் சீரான கடிதத்தொடர்புகளை மேற்கொள்ள கைதிகளுக்கு வசதி அளிக்கப்பட வேண்டும். அத்தியாவசிய தேவைகளுக்குப் பண உதவி வழங்கப்பட வேண்டும். சகல தமிழ்ப் பத்திரிகைகளும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும்.

இக்கைதிகளின் கோரிக்கைகளை ஆராய தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான சே. துரைராஜசிங்கம், பொ. செல்வராஜா மற்றும் சட்டத்தரணிகளான என். ரவிக்குமார், திருமதி சரோஜினி யோகேஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழு சிறைச்சா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'வை-12' விமானத்தை நோக்கி புலிகள் சூடு!

### அவசரமாக தரை இறங்கியது

மட்டக்களப்பு, ஜூலை 20

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ''வை - 12'' ரக சரக்கு விமானம் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி அவசரமாகத் தரை இறங்கியது.

ஹிங்குராகொட விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்ட அந்த விமானத்தில் 5 துப்பாக்கிச் சூடுகள் பிடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்றுக் காலை 10-30 மணியளவில் மட்டக்களப்பு களுவன்கேணிப் பகுதிக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற இந்த விமானம் மட்டக்களப்பிலிருந்து கரையோரம் வழியாகப் பறந்து கொண்டிருந்தபோதே விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10-21)

# நெடுங்கேணிப் பகுதியில் நேற்று படையினர்-புலிகள் ஷெல் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 20

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள 53 ஆவது படையணியைச் சேர்ந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று புதிதாக மோதல்கள் இடம்பெற்றன.

இரு தரப்பினரும் பரஸ்பரம் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதல்களின்போது இரு படையினரும் விடுதலைப் புலிகள் சார்பில் இருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் சார்பில் கலையரசி (ஜெயகுலசிங்கம் கௌசலா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து வந்த ஐவர் கடற்படையினரிடம் சிக்கினர்!

### காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தமது உறவினர்களைப் பார்க்க வந்த வன்னியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் மூன்று படகோட்டிகளும் இலங்கைக் கடற்படையினரால் அடித்து நையப் புடைக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் கனகராயன் குளத்தைச் சேர்ந்த அரியநாயகம் ஸ்ரீகாந்தன் (வயது-20)—

வவுனிக்குளம் மல்லாவியைச் சேர்ந்த சின்னத்துரை கிருபாகரன் (வயது-22) ஆகிய இருவரும், ஓட்டிகளான தலைமன்னாரைச் சேர்ந்த தங்கராசா சசிகுமார் (வயது-17) மன்னார் பனங்கட்டிக்கொட்டைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் கடற்றொழிலாளர்களின் 22 படகுகள் கடத்தப்பட்டன!

### விடுவிக்க புலிகள் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 20

மூதூரில் நேற்றுக் காலை கடற்றொழிலாளர்களின் 22 படகுகள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டன.

இந்தப் படகுகளை விடுதலைப் புலிகள் உறுப்பினர்களே கடத்தியதாகவும் —

கடத்தப்பட்ட படகுகளில் இருந்து மூவர் தப்பி வந்துவிட்டனர் என்றும் —

படகுகளை விடுவிக்க படகு ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபா புலிகள் கோருவதாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-5)

## முச்சந்தி முரளி



சும்மா விட்டாலும் 'ஜெயசிக்குறு' மறந்து போகும் பாருங்கோ...!

## கொக்குவிலில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் காயம்

இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி தலையில் பலத்த காயத்துடன் ஆபத்தான நிலையில் நேற்று முன்தினம் மாலை ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ சாவடியில் வேலை செய்த 9 தொழிலாளர் கடத்தப்பட்டனர்

### உயிலங்குளத்தில் சம்பவம்

வவுனியா, ஜூலை 20

உயிலங்குளம் சோதனைச் சாவடியில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 9 தமிழ்த் தொழிலாளர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து மன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் துறைமுகப்பகுதியில் கடற்கண்ணிகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 20

திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த 6 கடற் கண்ணிகளை கடற்படையினர் கண்டு பிடித்தனர்.

சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இது பற்றி தகவல் தருகையில், இந்தக் கடற்கண்ணிகள் ஒவ்வொன்றும் 50 கிலோ எடை கொண்டவை என்று தெரிவித்தார்.

கண்ணாடி இழை மூடிகளைக் கொண்ட இந்த கடற் கண்ணிகளை கப்பல்களின் அடிப்பாகத்தில் பொருத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்த கடற் கண்ணிவெடிகளை அதிநவீன உபகரணங்களைப் பாவித்து கடற்படை சுழியோடிகள் கண்டு பிடித்து செயலிழக்கச் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிங்காரவேலு தேவதாசன்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சிங்காரவேலு தேவதாசன் 19-07-1997 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20-07-97 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு கலாசாலை வீதி, திருநெல்வேலியில் (கலாமன்ற முன் ஒழுங்கை) நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. துளசிதாசன்
(பேறாமகன்)

கலாசாலை வீதி,
(கலாமன்ற முன் ஒழுங்கை)
திருநெல்வேலி.

(48488)

## சபாபதிப்பிள்ளை மயில்வாகனம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப் பிள்ளை மயில்வாகனம் 19 - 7 - 97 சனியன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், மற்றும் இரத்தினம்மா, சிவமணி, சண்முகநாதன், பாலச்சந்திரன், கருணாமூர்த்தி, சிவகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், துரை. புஸ்பராஜா, விஜயலட்சுமி, றஞ்சினி, ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வநாயகம், அருந்தவமலர், இராஜநாயகம், வசந்தகுமாரி, மகேந்திரராஜா, யோகராஜா, சுஜீபா, சுஜாதா, சுமதி, சாயி, கார்த்திகா, சாயீரூபன், தர்சனா, சாருசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரினது இறுதிக் கிரியைகள் 20 - 7 - 97 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்குதகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. சண்முகநாதன்
(மகன்)

அன்னை இல்லம்,
இணுவில் மேற்கு.

(47339)

## சுப்பிரமணியம் வீரசிங்கம்

(முன்னாள் உரிமையாளர், புவனேஸ்வரி பெடிக்சல் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்.)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நீராவியடி 118/4, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வீரசிங்கம் 19.7.97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும், பத்மாசனி, யோகநாதன், உலகநாதன், இராஜேஸ்வரி, பரமநாதன், தருமநாதன், கேதாரநாதன், தேவமலர், புவனேஸ்வரி, பரமகுருநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவபாதசுந்தரம், கமலாதேவி, விமலாதேவி, சச்சிதானந்தம், ஞானாம்பிகை, உஷாராணி, தவமலர், சிவதாஸ், ராஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், மனோன்மணி, துரைராஜா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-7-97) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திரு கோ. சிவபாதசுந்தரம்
(மருமகன், இளைப்பாறிய யாழ். மாநகரசபை எழுதுவினைஞர்)

(48487)

## பொன்னுப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர் — உரும்பிராய் கிழக்கு)

பொன்னுப்பிள்ளை வேலாயுதபிள்ளை 18-07-97 வெள்ளிக்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் முன்பு கண்டி அம்பிட்டியாவிலும் தற்போது உரும்பிராய் கிழக்கிலும் வசித்தவராவார். இவர் காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமதி அம்பிகா அருட்பிரகாசம், திரு. இராஜேந்திரம் (இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்பிரகாசத்தின் (உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்) அன்பு மாமனாரும், அருட்குமார் (கனடா), ஜெயதீபன் (யாழ். பல்கலைக் கழகம்), பிரதீபன் (கொழும்பு), திருமதி அருட்குமார் சிவானந்தி (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20-07-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. குகலிங்கம் (பேரன்)
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(48486)

## பதுக்கல் மண்ணெண்ணெய்

நவாலி, ஜூலை 20

சாவற்கட்டிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை மண்ணெய் நேற்று முன்தினம் அப்பகுதி படையினரால் எடுக்கப்பட்டு அங்குள்ள மக்களுக்கு 2லீற்றர் வீதம் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகம் செய்யப்பட்டது. (இ-100)

## ச. ச. நிலைய ஆண்டு விழா

திருநெல்வேலி, ஜூலை 20

நல்லூர் ஜனசக்தி சனசமூகநிலையத்தின் 49-ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் கு. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. பேச்சுப்போட்டி, இல்ல விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இவ்விழாவில் வழங்கப்படும்

(ஐ-135)

## 6 மாதமாக உதவிப்பணம் இல்லை

நெடுந்தீவு, ஜூலை 20

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கான அரசாங்க உதவி நன்கொடைப்பணம் கடந்த ஆறு மாதங்களாக வழங்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-111)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மக்கள் நலன்புரிச்சங்கத் தொண்டர்கள், பாடசாலைகளில் முதலுதவி பயிலும் மாணவர்கள் ஆகியோருக்கு நல்லூர் உற்சவகால தொண்டர் சேவை தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## ஆடிப்பிறப்பு சிறுவர் விழா

திருநெல்வேலி ஜூலை. 20

நல்லூர் முருகன் சனசமூக நிலையம் நடத்தும் ஆடிப்பிறப்பு சிறுவர் சிறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் க. குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். செயலக பிரதம கணக்காளர் சு. சிவபாலன் ஆசியுரை வழங்குவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ஐ-135)

# முள்ளிக்குளம் அகதி முகாமில் வயிற்றோட்டத்துக்கு நால்வர் பலி!

கொழும்பு, ஜூலை 20

மன்னாரில் உள்ள முள்ளிக்குளம் அகதி முகாம்களில் வயிற்றோட்டம் உட்பட பல தொற்று நோய்கள் பரவி உள்ளன.

இந்த முகாம்களில் 3 ஆயிரம் தமிழ் மக்கள் தங்கியுள்ளார்கள் என்று உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலரும் வயிற்றோட்டம், மலேரியா, கண்ணோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்—

4 பிள்ளைகள் வயிற்றோட்ட நோயினால் இறந்திருப்பதாகவும்— அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த அகதி முகாம்களுக்குத் தேவையான மருந்து வகைகளை சுகாதார அமைச்சு விரைவில் அனுப்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## வன்னியிலிருந்து வந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வன்னிப் பகுதியில் இருந்து தமது சொந்த ஊருக்கு மீளக் குடியேற வந்தவர் யாழ்ப்பாணக் கரையை அடைந்ததும் அங்கு மரணமானார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மயில்வாகனம் குமாரசாமி (வயது 74) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ் கடலேரியூடாக நேற்று படகின் மூலம் தமது மனைவியுடன் வந்த இவர் படகிலிருந்து இறங்கி குருநகர் சீநோர் முகாமுக்குச் சென்ற வேளையே திடீரென வீழ்ந்து மரணமானதாக தெரிவிக்கப் பட்டது.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-15)

## சேதமடைந்த கோபுரம் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பண்ணைப் பகுதியில் சேதமடைந்த நிலையில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுரத்தை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்த ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்படி தொலைத் தொடர்பு கோபுரத்தை அப்புறப்படுத்தும் பணியைப் பொறுப்பேற்று நிறைவேற்றக்கூடிய சம்பந்தப்பட்ட தொழில்சார் நிறுவனங்களின் உதவியை ரெலிக்கொம் நிறுவனம் கோரியுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தங்கள் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ)

# மரண அறிவித்தல்

## கந்தர் செல்வராசா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட க. செல்வராசா (பாடவிதான உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்) அவர்கள் 19-07-97 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தர் அவர்களின் அன்பு மகனும், வசந்தராணியின் (எழுதுநர், வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) அன்புக் கணவரும், சுதர்சன், காந்தீபன், அருணோதயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. திருமதி ஆழ்வாப்பிள்ளையின் மருமகனும், திருமதி வீரசிங்கம் சீதேவி அவர்களின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20-07-97 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
திருமதி செ. வசந்தராணி
(மனைவி)

"வசந்தம்"
வதிரி, கரவெட்டி.

(48482)


இதோ!

யாழ். நகரில் ஓர் அறிமுகம்!!

* கூடுதல் இணைப்புகள்
* மிக விரைவான பரிவர்த்தனை வசதி கொண்ட

"WIRELESS LOOP LINE"

TELEPHONE SERVICE

"வயர்லெஸ் லூப் லைன்"

தொலைபேசிச் சேவையை
மிக்க மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்கின்றோம்!

உங்கள் உறவினர்கள், அன்புக்குரியவர்கள் உலகில் எந்தமூலையில் இருப்பினும்
அவர்களுடன் ஒரு நொடியில் தொடர்பு கொள்ளவேண்டுமா?

நாடுங்கள்...

பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர்

ஸ்ரீலங்கா ரெலிகொம் லிமிட்டெட்

சோமசுந்தரம் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(சி/1157)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# படகு கவிழ்ந்து 35 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 20

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் ஆறு ஒன்றில் படகு கவிழ்ந்ததில் 35 பேர் பலியாகினர்.

மதிபுரா மாவட்டத்தின் கோசி நதியில் 45 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்தது. 8 பேர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றியதனாலேயே விபத்து ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. படகில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும் குழந்தைகளும் ஆவர்.

(ஐ-5)

## செவ்வாயில் சூரிய உதயம்

நியூயோர்க், ஜூலை 20

செவ்வாயில் தரையிறைக்கப்பட்டுள்ள 'பாத் டைண்டர்' விண்கலம் சூரியன் உதயமாகும் காட்சியை செவ்வாயில் இருந்து படம் பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ளது.

பூமியில் சூரியன் உதயமாகும் காட்சிக்கும் செவ்வாயில் இருந்து கிடைத்துள்ள காட்சிக்கும் இடையே பெரும் வேறுபாடு இருப்பதாக 'நாஸா' விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

## கஸகிஸ்தான் விமானியே பொறுப்பு

புதுடில்லி, ஜூலை 20

புதுடில்லி அருகே கடந்த ஆண்டு நவம்பரில் நடுவானில் கஸகிஸ்தான் விமானமும் சவுதி அரேபிய விமானமும் மோதிக் கொண்டதற்கு கஸகிஸ்தான் நாட்டு விமானியே பொறுப்பு என்று விசாரணைக் குழு கூறியுள்ளது.

நீதிபதி ஆர்.கே.லாஹோதி தலைமையிலான இந்த விசாரணைக்குழு தனது அறிக்கையை இந்திய சிவில் விமானத்துறை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.

நடுவானில் நிகழ்ந்த இந்தக் கோர விபத்தில் 340 பேர் பலியானது தெரிந்ததே.

## சதாமின் கட்சி 29 வருட ஆட்சி

தெஹிரான், ஜூலை 20

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னின் 'பாத்' கட்சி கடந்த வியாழனன்று தனது 29 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது.

1968 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் திகதி இராணுவப் புரட்சி மூலம் 'பாத்' கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

10 ஆண்டு கால யுத்தம், அமெரிக்க நேச அணியுடனான வளைகுடா போர் என யுத்தங்களின் தோல்வி கண்ட நிலையிலும் உயிராபத்துகளுக்கு மத்தியில் சதாம் ஹுசேய்னின் ஆட்சி அதிகாரத்தில் உறுதியாக நீடித்து வருகிறது.

(ஐ)

## 'இன்ரர்நெற்றில்' கோளாறு

'இன்ரர்நெற்' இணையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உலகம் முழுவதும் இடையூறு ஏற்பட்டது.

அமெரிக்க நிறுவனம் ஒன்றின் தொழில்நுட்பவியலாளர் ஒருவரின் தவறினால் ஏராளமான இன்ரர்நெற் பக்கங்கள் தற்காலிகமாக மறைந்து போயின. மின்னியல் கடிதங்களை அனுப்பியவர்களுக்கு அவை திரும்பிச் சென்றன.

'இன்ரர்நெற்' இணையத்தில் ஏற்பட்ட முதலாவது பெரிய இடையூறாக இது கருதப்படுகின்றது.

(ஐ-5)

# "ஆசியான்" பிரதிநிதிகள் குழு நொம்பென் விஜயம்; றணரித் ஆதரவுபடையின் கடைசிதளம் வீழ்ச்சி!

நொம்பென், ஜூலை 20

கம்போடியாவில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போராட்டத்தை அடுத்து உருவாகிய நிலைமை குறித்து இரண்டாவது பிரதமருடன் பேச்சு நடத்துவதற்காக "தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தின்" (ஆசியான்) பிரதி நிதிகள்குழு நொம்பென் போய்ச் சேர்ந்துள்ளது.

மூன்று 'ஆசியான்' நாடுகளின் வெளிநாடுகளில் அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் இக் குழுவினர் பதவியில் இருந்து விரட்டப்பட்ட கம்போடியாவின் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்தை பாங்கொக்கில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் இரண்டாவது பிரதமரான ஹுன் செனைச் சந்திப்பதற்காக நொம்பென் பயணமாகினர்.

இதேவேளை —

கம்போடிய நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அமெரிக்காவின் விசேட பிரதிநிதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபன் சொலாங் சீன, ஜப்பான், தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை நேற்று ஆரம்பித்தார்.

அமெரிக்கப் பிரதிநிதி நொம்பென்னில் இரண்டாவது பிரதமர் ஹுன் செனைச் சந்திப்பார்.

அப்போது கம்போடியாவில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பொறுப்பான ஹுன்செனிடம் அமெரிக்காவின் கடும் கண்டனத்தை வெளியிடுவார் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் வாஷிங்டனில் தெரிவித்தார்.

முதலாவது பிரதமர் றணரித்தின் இடத்துக்கு புதிய பிரதமராக வெளிவிவகார அமைச்சரை நியமித்தமை குறித்து அமெரிக்கா தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் — கம்போடியாவின் தலைநகருக்குத் தெற்கே — தாய்லாந்து எல்லையோரம் சாம்ரோங் என்னுமிடத்தில் அமைந்திருந்த இளவரசர் றணரித்தின் ஆதரவுப் படையினரின் கடைசி இராணுவத் தளமும் ஹுன்சென்னின் படையினரிடம் வீழ்ந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தலைநகர் நொம்பெனிலும் அயல் பிரதேசங்களிலும் இருந்து ஏற்கனவே விரட்டப்பட்டிருந்த றணரித்தின் படைகள் இந்த இராணுவ தளத்தில் நிலைகொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

(ஐ-5)

## உலக அரங்கில்

### மத்திய ஐரோப்பாவில் மீண்டும் கடும் மழை!

வார்ஸோ, ஜூலை: 20

மத்திய ஐரோப்பாவில் சிறிது இடைவெளியின் பின்னர் மீண்டும் பலத்த மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனால் ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஆபத்து தோன்றியுள்ளது.

கடந்த சில நாள்களாக வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட போலந்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியதை அடுத்து அங்கு வெள்ள நிலைமை மிக மோசமாகியுள்ளது.

போலந்தின் தென்பகுதியில் வெள்ளத் தடுப்பு அணைகளை அமைப்பதில் 11 ஆயிரம் துருப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வெள்ளத்தினால் பலியான 48 பேருக்கு போலந்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

### வால்வெள்ளியைக் கண்டு பிடித்த விஞ்ஞானி சூமேக்கர் கார் விபத்தில் மரணம்!

சிட்னி, ஜூலை 20

அமெரிக்காவின் பிரபல விண்வெளி ஆய்வு நிபுணர் விஞ்ஞானி யூஜீன் சூமேக்கர் நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற கார் விபத்தில் பலியானார்.

1994 ஆம் ஆண்டு வியாழன் கிரகத்துடன் மோதிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'சூமேக்கர்—லெவி' என்ற வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடித்த இருவரில் ஒருவர் சூமேக்கர் ஆவார்.

விடுமுறையைக் கழிப்பதற்காக அவர் தமது மனைவியுடன் ஆஸ்திரேலியா சென்றிருந்த சமயம் இந்தக் கோர விபத்து நிகழ்ந்தது.

ஆஸ்திரேலியாவின் மேற்கு எல்லைப் பகுதியில் சூமேக்கரும் அவரது மனைவி கரோலினும் பயணம் செய்து கொண்டிருந்த கார் எதிரே வந்த மற்றொரு வாகனத்துடன் மோதிச் சுக்கு நூறாகியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சூமேக்கரின் மனைவி கரோலின் படுகாயமடைந்தார்; இவரும் ஒரு விண்ணியல் நிபுணராவார்.

சந்திரனுக்குச் சென்ற "அப்பலோ" விண்வெளிப் பயணம் உட்பட அமெரிக்காவின் பல விண்வெளிப் பயணங்களில் விஞ்ஞானி சூமேக்கர் முக்கிய பங்காற்றியிருந்தார்.

(ஐ)

### மீண்டும் யுத்த நிறுத்தம் செய்வதற்கு ஐ. ஆர். ஏ. அரசியல் பிரிவு விருப்பம்

#### ராணுவத் தலைமையிடம் கோரிக்கை

லண்டன், ஜூலை. 20

ஐரிஸ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவு மீண்டும் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளது.

ஐரிஸ் குடியரசு இராணுவத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதால் புதிய யுத்த நிறுத்த வேண்டுகோளைத் தாம் விடுப்பதாக 'சின்பீன்' அரசியல் பிரிவு தலைவர் ஜெரி அடம்ஸ் தெரிவித்தார்.

ஜெரி அடம்ஸும் அதன் பிரதம பேச்சாளர் மார்டீன் பெக்கேயல்ஸும் விரிவான அறிக்கை ஒன்றை ஐரிஸ் குடியரசு இராணுவத்திடம் சமர்ப்பித்துள்ளனர். 1994 ஓகஸ்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட யுத்த நிறுத்தத்தை மீண்டும் ஏற்படுத்துமாறு அவர்கள் ஐரிஸ் குடியரசு இராணுவத்தின் தலைமையிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 17 மாத காலம் அமுலில் இருந்த யுத்த நிறுத்தத்தை ஐரிஸ் குடியரசு இராணுவம் லண்டனில் சக்தி வாய்ந்த குண்டொன்றை வெடிக்கச் செய்ததன் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

### ஆர்ப்பாட்டம்

பெரு நாட்டில் அதிபர் அல்பார்ட்டோ புஜிமோறியின் சர்வாதிகாரப் போக்கை கண்டித்து தலைநகர் லீமாவில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றுள்ளன.

செல்வாக்கு மிக்க அமைச்சர்கள் சிலரின் தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்பட்டதாகத் தெரிய வந்ததை அடுத்து மூன்று முக்கிய அமைச்சர்கள் பதவி விலகினர்.

அதிபரின் நடவடிக்கைகளில் சர்வாதிகாரப் போக்கு மேலோங்கி வருவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கருதுகின்றனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் தொழிலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

(ஐ)

### விற்பனைக்குதயாரான 90 குழந்தைகள் மீட்பு!

#### பெனின் நாட்டில் சம்பவம்

அடிமைகளாக விற்பதற்கு ஆயத்தமான நிலையில் வைக்கப்பட்டிருந்த 90 குழந்தைகள் மேற்கு ஆபிரிக்க நாடான பெனினில் மீட்கப்பட்டுள்ளனர்.

பெனின் நாட்டின் அயல் நாடான நைஜீரியாவுக்கு இந்தக் குழந்தை அடிமைகளைக் கொண்டு செல்வதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்டிருந்த சமயம் பெனின் பொலீஸார் அவர்களை மீட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

குழந்தைகளைக் கடத்துவதற்கு முயன்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் குழந்தைகளை அடிமைகளாக விற்பது சர்வசாதாரணமான சம்பவங்களாகிவிட்டன என்று அங்குள்ள செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குழந்தைகளைப் பணக்காரர்களாக்கப் போவதாகக் கூறி பெற்றோரிடம் இருந்து அவர்களைக் குறைந்த விலைக்கு வாங்கும் கும்பல்கள் அக் குழந்தைகளைப் பின்னர் மத்திய ஆபிரிக்க நாடுகளில் அடிமைகளாக விற்கின்றன.

### பங்களாதேஷில் தஞ்சமடையும் பர்மிய அகதிகளின் நிலை அறிய ஐ.நா. தூதரகம் அனுமதிகோருகிறது

கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் பங்களாதேஷுக்குள் நுழைந்துள்ள 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் பேர் வரையான பர்மிய முஸ்லிம் அகதிகளை நேரில் சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் (யூ. என். எச். சீ. ஆர்.) பங்களாதேஷ் அரசிடம் கேட்டிருக்கிறது.

பர்மிய அகதிகள் வலுக்கட்டாயமாக பர்மாவுக்குத் திருப்பி அனுப்பப்படுவதாக வந்த குற்றச்சாட்டுக்களை அடுத்தே யூ. என். எச். சீ. ஆர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

1991ஆம் ஆண்டில் 2 இலட்சம் பர்மிய முஸ்லிம்கள் பங்களா தேஷுக்குள் அடைக்கலம்நாடிப்படையெடுத்திருந்தனர். ஆனால் அவர்கள் அனைவருமே தற்போது தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் தற்சமயம் சுமார் 20 ஆயிரம் பேர் மட்டுமே பங்களாதேஷில் தங்கியுள்ளனர்.

தற்போது கடந்த இரு மாத காலமாக பர்மிய அகதிகள் புதிதாக பங்களாதேஷுக்குள் வர ஆரம்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உதயதாரகை" படகு அடுத்தவாரம்சேவைக்கு!

நெடுந்தீவு, ஜூலை20

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கத்தின் 'உதய தாரகை' என்ற படகின் புனரமைப்பு வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இப்படகு அடுத்த வாரம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மிக நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் கிடக்கும் 'சமுத்திரா தேவி' படகையும் புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-111)

## குருபூர்ணிமா ஆராதனை

குருபூர்ணிமாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெறும். (ஐ-4)

## கருத்தரங்கு

கோண்டாவில், ஜூலை 20

உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி பொதுப்பணி மன்றங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள 'அமைப்புக்களும் செயற்பாடுகளும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று மாலை 4 மணிக்கு உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வ. ஆறுமுகம் கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார். (ஐ-71)

## நாடகமும் அரங்கியலும் கருத்தரங்கு

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ''நாடகமும் அரங்கியலும்'' பாடத்துக்கான கருத்தரங்கு எதிர்வரும் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இக் கருத்தரங்கில் விரிவுரையாற்றவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட சகல மாணவர்களையும் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வலயம்-1 கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

# ஆரியபாஷாபிவிருத்தி சங்கத்துக்கு தனியான கட்டடம் நிறுவ வேண்டும்

## கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

''யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தனக்கென ஒரு கட்டடம் இல்லாமல் இருப்பது தமிழ் செய்த தவக்குறைவு. அக்குறையை நிவர்த்தி செய்வதற்கு சங்கம் ஒரு காணியை வாங்கித் தனக்கென ஒரு கட்டடத்தை நிறுவுதல் வேண்டும். அக்கட்டடத்தினுள் தொன்மை வாய்ந்த நூல்களைப் பேணி நூலகம் ஒன்றையும் அமைத்தல்வேண்டும்.''

யாழ். வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா இவ்வாறு தெரிவித்தார்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற போது பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துத் பேசிய போதே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தினரால் தமிழுக்கென ஒரு தமிழியற்றுறை ஆரம்பிக்கப்படல் வேண்டும். அத்துறையினூடாக மாணவ சமுதாயம், ஆசிரிய சமுதாயம், கல்வி நிலையங்கள் பயன்பட அது பெரிதும் உதவும்.

அறிஞர்களின் ஆக்கங்களும் வெளியீடுகளும் இவற்றின் மூலம் பேணப்பட வாய்ப்புண்டு. தமிழ்ப்பண்டிதர்கள் தாங்கள் பெற்ற வரன்முறையான கல்வி விழுமியங்களை அடுத்த சந்ததியினருக்கு வழங்க இந்த அமைப்பு உதவும்— என்றார்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

★ ஆசிரிய நியமனத்தின் போது கல்வித் திணைக்கள பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை வழங்குவதோடு தனியான சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டும்.

★ ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் தமிழாசிரியர் பயிற்சி நெறியில் ஆசிரிய மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல் வேண்டும்.

★ பாடசாலை மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகளை அதிகரித்தல் வேண்டும்.

இப்பொதுக் கூட்டத்தில் க. சொக்கலிங்கம், கோ. சி. வேலாயுதம் ஆகியோர் உபதலைவர்களாகவும், ம. ந. கடம்பேசுவரன் பொதுச் செயலாளராகவும், சோ.பத்மநாதன் பரீட்சைச் செயலாளராகவும், சோதிப் பெருமாள் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-5)

## உ. முத்திரைக்கு உலர் உணவு விநியோகம்

உரும்பராய், ஜூலை 20

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான 45 ''ஏ''பி' முத்திரைகளுக்கு உலர் உணவுப் பொருள் விநியோகம் நடைபெறுகிறது.

அரிசி, சீனி, பருப்பு, ''ஹைலன்ட்'' பால்மா ஆகியன வழங்கப்படுகின்றன. எதிர் வரும் 27ஆம் திகதிக்கு முன்பு தமக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் படி பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-54)

## வெற்றிலை தட்டுப்பாடு

உரும்பிராய், ஜூலை 20

வெற்றிலையின் விலை மிகவும் உயர்ந்துள்ளதனால் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வெற்றிலை 10 ரூபாவுக்கு மேல் விற்பனையாகிறது.

கொழும்புக்கான போக்குவரத்துத் தடைப்பட்டமையே இதற்குக் காரணம் என வர்த்தகர்கள் கூறினர். (ஐ-154)

# அன்பைத் தேடும் இதயங்கள்

இன்று எல்லோர் மனதிலும் ஒரு தவிப்பு, ஏக்கம் உண்டு. இது இயல்பான எம்முடன் கூடிய ஒன்றாக உணரப்படும் ஓர் உண்மையாகி விட்டது. பேறுகால வேதனையுறும் பெண்ணைப் போன்று இயற்கையே தவிக்கின்றது. ஏங்குகின்றது. மனித மாண்பு மறுக்கப்பட்டும் மறக்கப்படும் இக்காலத்தில் அன்பு, மனித மதிப்பு, நீதிக்காகத் தவிப்பு; ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டிய தவிப்பு - ஏக்கம்: உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டிய தவிப்பு என்னாகிறது. எதிர்பாராத இடம்பெயர்வையும், ஈடுசெய்ய முடியாத இழப்புக்களையும் சந்தித்த நாம் இன்னும் நிச்சயமில்லாத ஒரு நிலையில் ஒவ்வோர் மனங்களிலும் நிலவுவதும் தவிப்பும் ஏக்கமும் தான். பெற்றோர் பிள்ளைகளையும்; சுற்றம் சூழலையும், உற்றார் உறவுகளையும் பிரிந்த நிலையில் ஒன்று இணையவும், ஒருவரையொருவர் காணவும் ஒரு தவிப்பும் ஏக்கமும்.

உடைந்த உருக்குலைந்த இல்லங்களைப் பார்க்கையில் அவற்றை மீண்டும் பெற முடியுமா என்ற ஒரு பெரும் ஏக்கம்; உடைமைகளை உடையவர்கள் கண்முன்னால் அயலவர்களும், வல்லவர்களும் அபகரித்து உரிமை பேசும் நிலையில் பலரின் மனங்களிலும் ஓர் ஏக்கமும், பயமும் ஏன், செயற்பட திறனற்ற நிலையும் தான் இந்த ஏக்கமும் தவிப்பும், பயமும் பலரின் வாழ்வையும்பறி கொள்வதை நாம்நம் கண் முன்னால் காண்கின்றோம். எமக்கு அருளப்பட்ட எம்மால் பாதுகாக்கப்படவேண்டி எம் கையில் படைத்தவனால் தரப்பட்ட நம் உயிரையே அழித்துக் கொள்ளும் அளவுக்கு இந்த துக்கம் செயற்படுவதையும் காண்கின்றோம்.

இந் நிலையில் விவிலியம் அல்லது வேதாகமம் கூறும், ''இவர்கள் ஆயன் இல்லாத ஆடுகளைப் போன்று இருக்கின்றார்கள்'' என்பது சிந்திக்கக் கூடியதொன்றாகும். ஆயன் கைத்தடியின் கீழ் ஆடுகள் பாதுகாப்பு நிலையை உணர்கின்றன, ஆயன் சிதறும் ஆடுகளை, பயந்தோடும் ஆடுகளை, ஏக்கத்தோடு பின்னடையும் ஆடுகளை ஒன்று சேர்க்கிறான்; அன்பு செய்கின்றான்; அணைத்து தோள் மீது போடுகின்றான். இதனால் ஏற்படும் தன்னிறைவு, நம்பிக்கையுணர்வு, ஏற்றுக்கொள்ளப்படும் நிலை ஆகியன இன்று எமக்குத் தேவை. இதற்காக நாம் ஒவ்வொருவரும் ஏங்குகின்றோம்; எமது நாட்டு நிலையில் இது எமக்கு அதிகம் தேவை.

இந்த ஆயனைப்போன்று, விசுவாசமாயிருத்தலை எல்லோரும் விரும்புகின்றோம். அன்பு செய்யப்பட ஏங்குகின்றோம். நம் இதயக்குமுறல்களை அவிழ்த்துவிடவும் அவற்றுக்கு செவிமடுக்கப்படவும் ஆறுதல் பெறவும் திடப்படுத்தப்படவும் ஏங்குகின்றோம்.

இன்று நாம் இந்த நல்ல இடையர்களின் எளிமை உள்ளத்தையும் ஆடுகளை இணைப்பதுபோன்ற ஒன்று சேர்க்கும் ஒற்றுமைப்படுத்தும் கருணை இதயத்தையும் கொண்டிருக்க வேண்டும். ''பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோன்று'' அரசியல், சமூக, குடும்ப, தனிநபர் நிலைகளால் அமுக்கப்படும் நாம் இன்னமும் பல்வேறு சூழ்நிலைகளால் அமுக்கப்படுகின்றோம். ஒடுக்கப்படுகின்றோம். சுயநலமும் ''நான் வாழ்ந்தால் போதும்'' என்ற நிலையும் நம்மவர்க்கு இயல்பாகவேயுள்ள ஓர் எரிச்சல்தனமும் தனிநபரிலும், குடும்பத்திலும் சமூகத்திலும் நிலவும் ஏக்கங்களை இரட்டிப்பாக்குகின்றன. மனமடிவுகட்கும் மரணங்கட்கும் காரணமாகின்றன.

எனவே ஏங்கித் தவிக்கும் எம் சகோதர சகோதரிகட்கு நம்பிக்கையை ஊட்டும் நல்ல ஆசான்களாக நாம் அழைக்கப்படுகின்றோம். எம்நாட்டுச் சூழ் நிலையால் கல்வியில் பாதிப்படைந்த பிள்ளைகளை அரவணைக்கும் அன்னை தந்தையராக இருந்து அறிவுபுகட்ட ஆசிரியர்கள் அழைக்கப்படுகின்றார்கள்: நம்பிக்கையூட்டும், வழி நடத்தும், புரிந்துகொள்ளும் நிலையால் இடிந்த கல்வியை உயர்த்த இவர்கள் உயரிய சேவை வேண்டப்படுகின்றது.

குடும்பத்தில் அன்பும் பரிவும் கொண்ட பெற்றோர் தம்பிள்ளைகளின் சுமையையும் அமைவும் அன்பும் கொண்ட பிள்ளைகள் பெற்றோரின் சுமைகளையும் தாங்குகின்ற சுமைதாங்கிகளாக இருக்க அழைக்கப்படுகின்றார்கள் அதிகாரம், ஆணவம், அடக்குமுறையைக் கையாளாது, விளங்கும், புரிந்து கொள்ளும் நிலையில் தலைவர்கள் தம் பொறுப்பில் உள்ளவர்களை வழி நடத்தவும், பரஸ்பர உரையாடல், ஏற்றுக் கொள்ளல் மூலம் சுமுகமான உறவைக் கட்டும் நல்ல ஆயர்களாகச் சேவை மனநிலையில் பணியாற்றவும் அழைக்கப்படுகிறார்கள். சமயம் உண்மையைக் கண்டு கொள்ளவும், அன்பிற்கு அடிபணியவும், மனித விழுமியங்களுடன் கூடிய சமுதாயத்தை - ஒற்றுமையுடன் உழைக்கும் சமுதாயத்தை-சிதறடிக்க வேண்டும் நம்பிக்கையில் நம்வாழ்வைக்கட்ட உதவவேண்டும்.

ஆடுகள் சிதறிப்போகின்றன. இவைகளை ஒன்று சேர்க்கும் ஒரு குடும்பமாக்கும் உன்னத பணி, சமயத் தலைவர்கள் கையிலோ அன்றேல் அரசியல் தலைவர்கள் கையிலோ மட்டும் அல்ல. மாறாக ஒவ்வொருவர் கையிலும் உண்டு. ஒன்று மட்டும் தேவை. நாம் சிதறிப் போகின்றோம் ஒரு குடும்பமாக வேண்டும் என்ற உணர்வுமட்டும் தேவை.

நாம் எல்லோரும் ஓர் இறைவன் பிள்ளைகள் என்ற உணர்வில் அவன் தாழ் பணிந்து நம்பிக்கையுடன் நம் வாழ்வைக் காட்ட வேண்டும். ஆயன் இல்லாத ஆடுகள் நாம் ஆயினும் இறைவன் துணையை நாடுவோம். நம்பிக்கையை ஊட்டும் ஆயன்பணியை நாம் ஒவ்வொருவரும் எமது நிலையில் பொறுப்புடன் புரிவோம் எம் சமுதாயத்தை ஒன்றாக்க கட்டுவோம். எம் சமுதாயத்துக்கே துரோகம் செய்யாத நல்ல விசுவாசமுள்ள ஆடுகளாகவும், ஆயர்களாகவும் செயற்படுவதனால் ஒற்றுமையான ஒரு நிலையை நாம் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை கொள்வோம்.

அருட்செல்வி கோவியா
(திருக்குடும்ப மாகாணசபை முதல்வர்)

## ஞாயிறு நற்பிரசாதம்


## றோணியோ வேலைகள்

உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-

திருவள்ளுவர் அச்சகம்

யாழ்.மாநகரசபை அருகில்
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(48436)

## உடன் தேவை

எமது வைத்தியசாலைக்கு ஆங்கில தட்டச்சு அனுபவமுள்ள Accounts Clerk உடன் தேவை.

தொடர்பு:-
வைத்திய அதிகாரி
Mc Leod Hospital
இணுவில்.

(48481)

## மணமகள் தேவை

அரச உயர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பிரபலமான ஒருவருக்கு வாழ்க்கைத்துணை தேவை. வயது 45-க்கும் மேற்படாத இந்து சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், நல்லொழுக்கமும் கல்வியறிவும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். தரகர்கள் தேவையில்லை. சகல விவரங்களுடனும் நேரில் வரவும். யாவும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும். (நேரம் 9 — 10 மணி)

இல.25/16, ரயில்வே வியூ,
கச்சேரி-நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(48484)

## அறிவித்தல்

வன்னியில் இருந்து பிளாஸ்ரிக் படகுகள் மூலம் குருநகர் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தவர்கள் 30—7—1997-க்கு முன்பாக தங்கள் படகுகளுக்குரிய அத்தாட்சியை சமர்ப்பித்து தங்கள் படகுகளைப் பொறுப்பேற்கும் வண்ணம் இறுதி அறிவித்தலாக அறியத்தருகின்றோம்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச்சங்கம்.

(48479) S—217

## வாழ்த்துகின்றோம்

முதலாம் தர கிராம சேவையாளராகப் பதவியுயர்வு பெற்றிருக்கும்

திரு. றோமான் அன்ரனி G. S.

அவர்களை வாழ்க, வளர்க, பணி சிறக்குகவென வாழ்த்துகின்றோம்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்.

(48478) S — 217


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண [illegible] நூலகம்

# தென் பகுதி செல்வோர் திரும்பிவர

# பொலீஸ் அனுமதி தேவையில்லை

## யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் அல்லது கப்பல் மூலம் தெற்கே செல்லும் பயணிகள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு பொலீஸ் நிலையங்களுக்கு செல்லத் தேவையில்லை என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

கப்பல் மூலமோ, விமான மூலமோ பயணம்மேற்கொள்ளும் நேரத்தில் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தால் வழங்கப்படும் பயண அனுமதிக்கடிதத்தை விமான மூலம் திரும்பும் பயணிகள் கொழும்பில் உள்ள ''லயன் எயார்'' அலுவலகத்தில் சமர்ப்பித்தும்—

கப்பல் மூலம் திரும்பும் பயணிகள் திருகோணமலையில் உள்ள பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் அலுவலகத்தில் பயண அனுமதிக் கடிதத்தைச் சமர்ப்பித்தும்—தமது பயணத்தை மேற் கொள்ளமுடியும் என்று யாழ், சிவில் நிர்வாக அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்:

பயணத்தின் போது யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தால் வழங்கப்படும் பயண அனுமதிக்கடிதத்தை சம்பந்தப்பட்ட பயணிகள் தெற்கில் விடுதியிலோ அல்லது வேறு எங்காவதோ தங்கிநிற்கும் போது தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் ஆவணமாகவும் பயன்படுத்த முடியும் என்றும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## தென்மராட்சி விவசாயிகளுக்கு

தென்மராட்சி, ஜூலை 20

தென்மராட்சிப் பிரதேசத்தில் தோட்ட மண்வெட்டி தேவைப்படுவோர் தங்கள் பகுதி விவசாய சம்மேளனங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ-117)

# பயணிகள் சேவைக்கு விரைவில் புதிய கப்பல்

## அத்தியாவசிய சேவைப் பிரிவு தகவல்

கொழும்பு, ஜூலை 20

திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்காக புதிய கப்பல் ஒன்றை அத்தியாவசிய சேவைகள் நாயகம் திணைக்களம் வாடகைக்கு அமர்த்தியுள்ளது. திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் அலுவலகத்துக்கு இத்தகவல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த 'சஜிந்த' கப்பல் தற்சமயம் கொழும்பில் வடக்குக்கான பொருள்களை ஏற்றிக் கொண்டிருப்பதாலும்—'தாரகி' கப்பல் மன்னாருக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடவிருப்பதாலும்—புதிய கப்பல் ஒன்று பெறப்பட்டுள்ளது.

இக்கப்பலில் 500 பயணிகள் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்ட போதும், அதன் சேவை எப்போது ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-150-3)

# குழந்தையைக் காப்பாற்ற நீங்களும் உதவுங்கள்

இருதயத்தில் துவாரம் உள்ள மூன்று வயதுக் குழந்தை செல்வன் கனகலிங்கம் விமல்ராஜையும், அதே நோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவனின் தாயார் யோகேஸ்வரி கனகலிங்கத்தையும் காப்பாற்றுவதற்காக—

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் ஆரம்பித்த நிதிக்கு—

மனித நேயமும், தர்ம சிந்தையும் உள்ள பலரும், நிறுவனத்தினர்களும் பெரும் விருப்புடன் பண உதவி செய்து வருகிறார்கள்.

சிறுவன் விமல்ராஜ், அவரது தாயார் இருவரினதும் உடல்நிலை. குடும்ப நிலைமைகளை முன்னிட்டு மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் ஆரம்பித்த உயிர் காக்கும் சிகிச்சை நிதி குறித்து 06.07.1997 ஆம் திகதி உதயனில் முழுவிவரங்களையும் வெளியிட்டிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து பலரும் அத்திட்டத்துக்கு நிதி உதவி அளித்து வருவதாக லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். எனையோரும் உதவினால் தாயையும் சேயையும் வாழ வைக்க முடியும்.

இச் சிகிச்சை நிதிக்காக லயன்ஸ் கழகத்தினர் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் ஒரு சேமிப் புவைப்புக் கணக்கை ஆரம்பித்துள்ளனர். அதன் இலக்கம் 12219.

இக்குடும்பத்தை வாழ வைக்க விரும்புவோர் நேரடியாக இக்கணக்கிற்குப் பணம் செலுத்தலாம். காசோலை மூலம் பணம் செலுத்த விரும்பினால், ''முகாமையாளர், இலங்கைவங்கி—மானிப்பாய், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக சேமிப்பு வைப்புக்கணக்கு இல-12219'' என்று காசோலை எழுதி, சம்பந்தப்பட்ட வங்கிக்கு அல்லது மானிப்பாய் லயன்ஸ் கழகத்துக்கு அனுப்பிவைக்கலாம். மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத் தொடர்பு முகவரி: ஸி. கேசவராஜன், (தலைவர், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்), அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி.

பிஞ்சுக்குழந்தை விமல்ராஜனையும் அவன் தாயையும் காப்பாற்றும் பொறுப்பு உங்களிடம் உள்ளது. சிறுதுளி பெருவெள்ளம் என்பதை உணர்ந்து உங்கள் பங்களிப்பை [illegible]

## மாணவர்கள் நிதியுதவி

தென்மராட்சி, ஜூலை 20

மானிப்பாயைச் சேர்ந்த மூன்று வயதுச் சிறுவனின் இருதய அறுவைச் சிகிச்சைக்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களால் சேகரிக்கப்பட்ட 17 ஆயிரத்து 500 ரூபா கல்லூரி மாணவர்களால சாவகச்சேரி லயன்ஸ் கழகப் பொருளாளர் எஸ். சந்திரகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந் நிதி வழங்கும் வைபவத்தில் கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருணானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்;

உயிரைக் காப்பாற்றும் பணிக்கு இக் கல்லூரி மாணவர்களின் முன்மாதிரியை அனைவரும் பாராட்டியுள்ளனர்.

இச் சிறுவனின் இருதய நோய் அறுவைச் சிகிச்சைக்கு நிதி உதவி வழங்குமாறு மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம் விடுத்த கோரிக்கையையடுத்து தென்மராட்சிப் பிரதேச மக்களிடமிருந்து நிதி சேர்க்க சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் முன்வந்துள்ளனர். (ஐ-117)

# பாதாள உலக கும்பல்களை சேர்ந்த நால்வர் கொலை!

## கொழும்பில் கோஷ்டி மோதல்

கொழும்பு, ஜூலை 20

கொழும்பில் இரு பாதாள உலக கும்பல்களிடையே கடந்த வாரம் இடம் பெற்ற மோதலில் களு அஜித் உட்பட நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுறது.

கொன்ற நால்வரின் சடலங்களும் வாகனம் ஒன்றுக்குள் போடப்பட்டு அத்திட்டியா பகுதியில் அடையாளம் காண முடியாத நிலையில் எரிக்கப்பட்டிருந்தன.

எரிக்கப்பட்டவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாத நிலையில் இருந்த போதிலும் அவ்விடத்திலிருந்து பொலீஸார் களு அஜித்தின் அடையாள அட்டையைக் கண்டெடுத்துள்ளனர்.

ஆனால் இக்கொலைகளைச் செய்துவிட்டு களு அஜித் தனது அடையாள அட்டையை அவ்விடத்தில் போட்டிருக்கலாம் அல்லது அடையாள அட்டை தவறுதலாக விழுந்திருக்கக் கூடும் என தெஹிவளைப் பொலீஸார் சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் வெல்லம்பிட்டிப் பகுதியில் பாதாள உலகத்தைச் சேர்ந்த மற்றொரு முக்கிய நபர் தனது தலைக்குத் தானே சுட்டு தற்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10-164)

## பாலர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 20

அரியாலை சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை யொட்டிய பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரம்பன் குளம் மகாமாரி அம்மன் ஆலய வீதியில் இடம் பெறும். (ஐ-3)

## கோணேஸ்வரி கொலைச் சம்பவம்:

# ஜோசப் பரராஜசிங்கத்துக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

மட்டக்களப்பு, ஜூலை 20

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு கல்முனை நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

அம்பாறை சென்ரல் காம்ப் கிராமத்தைச் சேர்ந்த முருகேசபிள்ளை கோணேஸ்வரி என்ற குடும்பப் பெண்ணைக் கற்பழித்து அவரது பிறப்பு உறுப்பினுள் கிரனேட்டை வெடிக்கச் செய்து கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள வழக்கில் சாட்சியமளிக்க எதிர் வரும்28 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கல்முனை நீதிவானால் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமக்கு நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தமது சிறப்புரிமையை மீறும் செயல் என்று ஜோசப் பரராஜசிங்கம் சபாநாயகருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தெரிவித்த புகாரைத் தொடர்ந்தே தாம் ஜனாதிபதிக்கு இச் சம்பவம் பற்றித் தெரியப்படுத்தியதாகவும் — சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி தான் அல்ல என்றும் — அவர் தெரிவித்துள்ளார். (ஐ-21-3)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வீட்டினுள் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவித்து ஒருவரின் சடலம் கடந்த வியாழனன்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த கறுப்பன் முனியாண்டி (வயது 45) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டது. அச்சடலம் மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (ஐ-15)

## பஸ் பயணிகள் காத்திருப்பு

தென்மராட்சி, ஜூலை 20

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் 769 இலக்க மார்க்கத்தில் நடத்தப்படும் பஸ் சேவை நண்பகலில் நடைபெறாததால் பயணிகள் பலமணி நேரம் வீதிகளில் காத்திருக்க வேண்டியுள்ளது.

பகல் 11.50 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ் பின்னர் மாலை 4.50 மணிக்கே சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு வருகிறது.

இடைப்பட்ட நேரத்தில் பஸ் சேவை இல்லாததால் மக்கள் பஸ் நிலையத்திலும் வீதிகளிலும் காத்திருக்க வேண்டியுள்ளதாக தெரிவித்தனர். (ஐ-117)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவரும் பௌதிக சிகிச்சைப் பிரிவுக்கு வடமராட்சி லயன்ஸ்கழகம் சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்குமிழ் [illegible] செய் [illegible] (ஐ-15)

## வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

நல்லூர் கைலாயபிள்ளையார் கோயில் பகுதியில் அனாதரவான நிலையில் இறந்துகிடந்ததாக ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

தம்பாலையைச் சேர்ந்த நாகமுத்து நடராசா (வயது 62) என்பவரே உயிரிழந்தவராவார். சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (ஐ-15)

# இரவு வேளை இளம் குடும்பஸ்தர் கத்தியால் குத்திக் கொலை

## அரியாலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இரவு வேளை இனந்தெரியாத நபர்களால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவித்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் கடந்த வியாழனன்று இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் அலெக்ஸ்கண்ணன் (வயது24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சடலத்தின் கழுத்துப் பகுதியில் கத்திக்குத்துக்கான காயங்கள் காணப்பட்டன.

சடலம் பிரேத பரிசோதனையின் நிமித்தமும் மரண விசாரணையின் பொருட்டும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (ஐ-15)

## முத்துத்தம்பி வித்தியாலயத்தில்

# பயிற்சி வகுப்புகளை நடத்த 5 ஆயிரம் ரூபா நிதி உதவி

திருநெல்வேலி, ஜூலை 20

திருநெல்வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களின் மொழி அறிவை விருத்தி செய்வதற்காக விசேட தமிழ் மொழியறிவு பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கும், பாடசாலை உபகரணங்களை அவர்களுக்கு வழங்குவதற்கும் ஐயாயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் தலைவர், திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் இயக்குநர் இ. இராஜா மகேந்திரசிங்கம் ஊடாக இந்நிதியை அனுப்பி வைத்துள்ளார். சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டை முன்னிட்டு இந்த நிதி கொழும்பு இராம கிருஷ்ண மிஷனால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

## அலுவலகம் இடம்மாறும்

குருநகர், ஜூலை. 20

யாழ். கோயில் வீதியில் தற்போது இயங்கி வரும் யாழ். கல்வி வலயம் 1-ன் அலுவலகத்தை மீண்டும் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கல்வித் திணைக்கள அலுவலகத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (ஐ-51)

## மண். எண்ணெய் விநியோகம்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் பங்கீட்டு அட்டைக்கு பாவனையாளர்களுக்கு இரண்டு லீற்றர் மண் எண்ணெயை சங்கக் கிளைகள் ஊடாக விநியோகித்து வருகின்றது. (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. இல: 86, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [சி/1154]

இல. 114, கண்டி வீதி, கச்சேரியடி தியாகராசா படிப்பகத்திற்கு அருகாமையில் காணியுடன் வீடும், அத்துடன் தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. மேலேயுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். (48483)

### தவறிவிட்டது

வற்சலா வைரமுத்து தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை என்ற எனது அடையாள அட்டையும், வங்கிப் புத்தகமும், வேறு சில ஆவணங்களும் சாவகச்சேரி பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக்காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும்; சன்மானம் வழங்கப்படும்; [48476]

### தேவை

றோணேயா மெஷின்கள், தட்டச்சு இயந்திரங்கள் இன்னும் பாவனைக்கு உதவாதவையும் உங்கள் இருப்பிடத்தில் கொள்வனவு செய்யப்படும். திருத்திக் கொடுக்கப்படும்: தபாலில் அல்லது நேரில் தொடர்பு கொள்க: க. நாகராஜா. 175, புது றோட், கொக்குவில் கிழக்கு. [47336]

சாடியுடன் உள்ள குறோட்டன், றோசா 50 சாடிகள் தேவை; தொடர்பு: விவரம் இல: 639, மே/பா 'உதயன்' யாழ்ப்பாணம். [சி/1153]

புதிய, பழைய பாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதம் 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம்; [48264]

**G. C. E. A/L MODEL PAPER**
**தமிழ் I, II**

1997ஆம் ஆண்டு பரீட்சைத் திணைக்களம் வெளியிட்ட முன் மாதிரி வினாத் தாள்களின் அடிப்படையாகத் தயாரிக்கப்பட்ட ஆறு வினாத்தாள்கள் அடங்கியது.

மாற்றியமைத்த புதிய பாடத்திட்டம்;

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
(48449)

விற்பனையாகின்றன
**புவியியல்**
**G.A.Q, B. A.**
கலாநிதி
க. குணராசா

- ★ விமான ஒளிப்படங்கள்.
- ★ இடவிளக்கவியற் படங்கள்.
- ★ மானிடப் புவியியல்
- ★ புவி வெளியுருவவியல்.

**கமலம் பதிப்பகம்**
82, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(48464)

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்; தொடர்பு: R. மருதம். 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (48263)

### மணப்பெண் தேவை

59ஆம்ஆண்டு பிறந்த மிருகசிரிடநட்ஷேத்திரமுடைய 8-ல் செவ்வாய் குற்றமுள்ள ஆணுக்கு தகுந்த அழகான மணப்பெண் தேவை; தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (48462)

ஜேர்மனியில் 12வருடமாகத் தொழில் புரியும் செவ்வாய் குற்றமற்ற ரோகிணிநட்ஷேத்திரமுடைய ஆணுக்கு தகுந்த மணப்பெண் தேவை. அத்தோடு சகல உத்தியோகத்திலும் மணமக்கள் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, யாழ். நாவலர் வீதி. (48463)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

12. 07. 97 அன்று நவாலி வீதியில் சங்கரத்தைச் சந்திக்கும், துணைவிச்சந்திக்கும் இடையில் தங்க ஆபரணமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது; உரியவர்கள் ஆதாரம் காட்டி வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் பெற்றுக் கொள்ளவும். (48467)

### கணக்காய்வுக் கை நூல்

காணக்காய்வுப் பரீட்சைக்குரிய வழிகாட்டும் கை நூல் நேரில் பெற திங்கள், செவ்வாய் மட்டும் பிற்பகல் 2 மணி—4மணி வரை 186/22, குருநாதர் வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (48474)

### விற்பனையாகின்றது

இந்து நாகரிகம் i, ii 1997 ஆம் ஆண்டுக்கான A/L பரீட்சைக்கமைவான மாதிரி வினாவிடை வடிவிலமைந்தது. புதிய பதிப்பு:- ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (48450)

## கண்ணீர் அஞ்சலி

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய
**ஆசிரியர் திரு. செ. கணேசமூர்த்தி**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சி. செல்லத்துரை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
யா/ ஆவரங்கால்
நடராஜ இராமலிங்க வித்தியாலயம்;

(48473)

## மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான

**பரிபாலனசபை - HA / 4 / J / 170**

தேர்த் திருப்பணி நிதியம்
தேர் இருப்பிடம், தேர்முட்டி, தேர் பராமரிப்புக்கான
நிதி சேகரிப்பு

அன்புடையீர்!

இவ்வாலயத்துக்கு 1980 ஆம் ஆண்டிலிருந்து பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பல லட்சம் ரூபா பணம், பொருட் செலவில் உருவாக்கப்பட்ட சித்திரத் தேருக்கு ஒரு நிரந்தர தேர் இருப்பிடம் தேர்முட்டி இற்றைவரை கட்டப்படாதது யாவரும் அறிந்த உண்மை;

பொது மக்களினால் இப்பரிபாலனசபை உருவாக்கப்பட்ட காலந் தொட்டு, இச்சபை பல திருப்பணிகளைச் சிறப்புற நிறைவேற்றியுள்ளது; 24-06-1991 இல் சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்ட நாளிலிருந்து, பல தடவைகள், பல வழிகளிலும் முயற்சி எடுத்து இதற்கு ஒரு நிரந்தர இருப்பிடம் கட்ட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட ஏனைய நிர்வாக அமைப்புகளுடன் தொடர்பு கொண்ட போதும், இதற்கு வேண்டிய எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலும், செயலளவில் செயற்படாமலும், எவ்வித ஒத்துழைப்பும் தராத நிலைப்பாட்டில் இத் தெய்வ கைங்கரியத்தில் கலந்து கொள்ள ஆர்வமிகு அடியார்களின் வேண்டுகோள் பிரகாரம் எமது ஆலயத்துக்கு பொது மக்களின் பணம், பொருளினால் உருவாக்கித் தந்த அரும் பெரும் பொக்கிஷமான "பொதுமக்கள் தேரை" பாதுகாக்க வேண்டியதன் அத்தியாவசியத்தை உணர்ந்து தேருக்கு தேர் இருப்பிடம், தேர் முட்டி ஆகியவற்றை, எமது ஆலயத்திற்கு சொந்தமான நிலம் "வதிரன்புலோ" வில் கட்டவும், தேர் பராமரிப்பை இச்சபையே செய்யவும் 07- 06 - 1997, 12 - 07 - 1997 தினங்களில் நடந்த பொதுச் சபையின் முடிவின் படி தீர்மானித்துள்ளோம். அதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் சம்பூரணப் படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாலய திருப்பணிக்கான நிதி உதவி செய்ய விரும்பும் அடியார்கள் நிதியை 2 ஆம் கிளை, இலங்கை வங்கி யாழ்ப்பாணம் - S/A, 24087 என்ற கணக்கு இலக்கம் மூலமோ அல்ல திரு: த. கணேசலிங்கம், பொருளாளர் மூளாய் வதிரன் புலோ, சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபைக்கோ நிதியை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

**பரிபாலனசபை**
மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர்
தேவஸ்தானம்.

மூளாய். 14-07-1997. (48468)

ஓம் சரவணபவ
சாவகச்சேரி டச்சு வீதி,
அருள்மிகு

## ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய
## 6 ஆவது ஸ்ரீ பழநிவேல் பவனி

ஷ ஆலய அலங்காரத் திருவிழாவின் 17 ஆம் திருவிழாவான இன்று (20 - 07 - 97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் ஆடிவேல் விழா ஆரம்பமாகும்.

★ அன்றையதினம் ஸ்ரீ பழநி ஆண்டவருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மங்கல வாத்தியங்கள் சகிதம் கலை கலாசார நிகழ்ச்சிகள், பஜனைகளுடன் அலங்கரித்த முத்துச் சப்பறத்தில் கதிர்காம முருகப் பெருமானின் வேல் நகர் வலம் வரும்.

★ ஆலயத்திலிருந்து புறப்பட்டு டச்சு வீதி வழியாக கென்ஸ்மன் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, செருக்கல் பிள்ளையார் கோயிலை அடைந்து, டச்சு வீதி வழியாக ஆலயத்தை அடையும்;

- ஆலய பரிபாலன சபை

(சி-1155)

## வீடு விற்பனைக்கு

வைமன் வீதியில் 2 பரப்புக்காணியில் 2900 சதுர அடியைக் கொண்ட மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு; தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு:- ஞா. மோகனசுந்தரம்
வேலைப்பகுதி, யாழ். மாநகரசபை.

(48461)

புன்னகை பூத்திடும்
இளநங்கையின் முகத்தினில்
இத்தனை மகிழ்ச்சியா? ஆம்
அத்தனைக்கும் காரணம்
அவள் முகத்தினில் என்றும் சங்கமம்.

## றோயல் றோஸ் டல்கம் பவுடர்

தீபத்தின் ஒளியினிலே
தீபாவின் அழகு கண்டேன்
தேவதை போல் அவள் திகழ
அவள் முகத்தில் சங்கமம்

## தீபா றோஸ் டல்கம் பவுடர்

தயாரிப்பாளர் :
**றோயல் இன்டஸ்ரீஸ்**
221 / 1 , ஆதமலி பில்டிங்
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13
தொலைபேசி இலக்கம்: 326679

சந்தைப்படுத்துவோர் :
**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(48470)

## முதலாண்டு நெஞ்சில் நினைவு



திருமதி
**சிவயோகமலர் இரத்தினசிங்கம்**

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை உன் கவலை
வருடமொன்று சென்றாலும் மறையவில்லை நின்னுருவம்
பெரியவளே! நீ எங்கே சென்றாய்? சென்ற இடத்தில்
உன் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் சுற்றத்தார்.

உடுவில். (48480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கைதிகள் உண்ணாவிரதம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள வடக்கு—கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 35 தமிழ்ப் பெண்கள் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஒரு வார காலத்துக்கு நீராகாரம் மட்டும் அருந்திப் போராட்டத்தை நடத்துவது என்றும் —

தமது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிடில் அதன் பின்னர் எதுவும் உட்கொள்ளாது சாகும்வரையிலான போராட்டத்தை ஆரம்பிப்பது என்றும் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ள கைதிகள் அறிவித்துள்ளனர்.

வெலிக்கடைச் சிறையில் தமக்கு நிரந்தர இடவசதி, அடிப்படை வசதி ஆகியவற்றைச் செய்து தரும்படி இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு—கிழக்கில் கைதாவோரில் விசாரணையின் பின் விடுதலையாவோர் தவிர ஏனையோர் தெற்கே உள்ள சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீதி விசாரணை இன்றி நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடயத்தில் மனித உரிமைக் குழுக்கள் ஏற்கனவே குரல் எழுப்பி இருந்தன. எனினும் இதுவரை இவர்கள் மீதான விசாரணை சரியான முறையில் நடத்தப்படவில்லை.

தற்பொழுது தான் இப்படியானவர்களை விசாரிக்க கொழும்பில் விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்கப் போவதாக நீதி அரசமைப்பு விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் இந்த உறுதிமொழியும் எப்பொழுது சாத்தியப்படப் போகிறதோ தெரியாது. இப்படி எத்தனையோ உறுதி மொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டுவிட்டன.

முன்னேற்றம் அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளின் நிலைமை மிகவும் மோசமானது. கைதிகளுக்கான குறைந்தபட்ச வசதிகள் கூட இங்கு கிடையாது

விசாரணை இன்றி, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் கிரிமினல் குற்றவாளிகள் போன்றே நடத்தப்படுகின்றனர். தடுத்துவைக்கப்பட்டோர் உண்மையான குற்றவாளிகளாகவும் இருக்கலாம்; குற்றம் எதுவும் இழைக்காத அப்பாவிகளாகவும் இருக்கலாம். ஆகவே இவர்கள் விடயத்தில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி இவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

தெற்குச் சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் நடப்பது இது முதலாவது சம்பவம் அல்ல. ஏற்கனவே பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்கள் அங்கு நடத்தப்பட்டுள்ளன. ஆனால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் காரணமாக அவை கைவிடப்பட்டன.

தற்பொழுது மீண்டும் உண்ணாவிரதம் ஆரம்பித்திருப்பது இந்த உறுதி மொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதையே காட்டுகிறது.

---

### அபிவிருத்திப் பணிகளை நிறுத்திவிட்டு

# தெற்கில் யுத்த மனோ நிலையை உருவாக்க அரசுக்கு யோசனை

கொழும்பு, ஜூலை 20

அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு நாட்டின் தென் பகுதி மக்களிடையே யுத்த மனோ நிலையை உருவாக்க வேண்டும்.

அரச நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இவ்வாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது

அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் விளக்கப் பட்டறை கடந்த வாரம் களுத்துறை நகரில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட அமைச்சர்கள், எம். பிக்கள் ஆகியோரே முன் கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அங்கு சமுகமளித்திருந்த ஓர் அமைச்சரும், பிரதி அமைச்சர் ஒருவரும் மட்டுமே இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த யோசனையை நிராகரித்த ஜனாதிபதி இவ்வாறான முயற்சிகள் நாட்டில் இனக்கலவரங்கள் ஏற்பட வழி வகுக்கும் என்று தெரிவித்தார் என 'திவயின' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## தோட்டத் தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்தக் கூடாது

### தொண்டமான் கோருகிறார்

கொழும்பு, ஜூலை 20

'தோட்ட மக்கள் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பிரபாகரனையும் அவரது ஆதரவாளர்களையும் போல் ஆயுதம் ஏந்திவிடக் கூடாது'

பதுளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அமைச்சர் எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கத்துடன் சிநேகபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## விவசாயிகளுக்கு விதை நெல்

நவாலி, ஜூலை 20

நவாலி விவசாயிகளுக்கான விதை நெல் உடுவில் கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்பட உள்ளது.

விவசாயிகள் தமது காணி பற்றிய முழு விவரத்துடன் நவாலிவடக்கு பழைய கிராம சேவையாளரின் இல்லத்தில் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஒரு புசல் நெல் 750 ரூபா வீதம் ஓரி 355, 351, பிஜி350 நெல் இன வகைகள் விநியோகிக்கப்படும் என்று நவாலி விவசாயசம்மேளனம் அறிவித்துள்ளது

(இ-100)

## வீரப்பனைச் சந்திக்க நக்கீரன் ஆசிரியர்

சென்னை, ஜூலை 20

நக்கீரன் இதழின் ஆசிரியர் ஆர். ஆர். கோபாலும் அதன் செய்தியாளர் சிவசுப்பிரமணியமும் சந்தன மரக்கடத்தல் வீரப்பனைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவதற்காகப் புறப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் புறப்படுவதற்கு முன் நேற்றுப் பிற்பகல் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியைச் சந்தித்தனர். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கே. ஏ. நம்பியார், உள்துறை செயலாளர் பூர்ணலிங்கம் ஆகியோரும் உடனிருந்தனர்.

கர்நாடக மாநில அரசின் வனத்துறையைச் சேர்ந்த 9 பேரை வீரப்பன் கடத்திச் சென்று பணயக் கைதியாக வைத்துள்ளான்.

அவர்களை விடுவிப்பதற்காக வீரப்பன் தெரிவித்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் நக்கீரன் இதழின் ஆசிரியரை வீரப்பனுடன் பேச்சுக்கள் நடத்துமாறு கோருவது என்று தமிழக அரசு முடிவு செய்தது.

(இ-4)

## கொக்குவில் சம்பவம் குறித்து இராணுவத் தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

இம்மாதம் 13 ஆம் திகதி கொக்குவில் உயரப்புலம் பகுதியில் இரு பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டது சம்பந்தமாக 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல விடுத்த பத்திரிகை அறிக்கை வருமாறு:-

கொக்குவில் உயரப்புலம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடமாடுகிறார்கள் எனக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் கடந்த 13 ஆம் திகதி மாலை 6.05 மணியளவில் இருபெண்களை எதிர்கொண்டனர்.

அவர்கள் மீது சந்தேகங்கொண்ட படையினர் அவர்களது அடையாள அட்டையைக் காட்டுமாறு கேட்டபோது அவர்களில் ஒருவர் பாதுகாப்பு உறையில் இடப்பட்ட அடையாள அட்டையைச் சமர்ப்பித்தார்.

அடையாள அட்டையின் பாதுகாப்பு உறையினுள் சந்தேகத்துக்கு இடமான ஆவணம் ஒன்று இருந்ததை படையினர் கண்டனர். அந்த ஆவணத்தை வெளியே எடுத்து படையினர் வாசிக்க முயன்றபோது அந்தப் பெண் கைக்குண்டொன்றை வீச முயன்றார். அதேவேளை தன் உடையினுள் மறைத்து வைத்திருந்த பிஸ்டல் மூலம் மற்றைய பெண் சுடமுற்பட்டார். உடனடியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட படையினர் அந்த இரு விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்களைக் சுட்டுக் கொன்றதுடன் அவர்களிடமிருந்து ஒரு பிஸ்டல், இரு கைக்குண்டுகள் இரு சயனைட் குப்பிகள் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

அடையாள அட்டை உறைக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஆவணத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எழுச்சியை ஏற்படுத்தும் பாடல் ஒன்று எழுதப்பட்டிருந்தது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

---

**நாளை**

**ஆடி 05**

**திங்கட்கிழமை**

திதி: பிரதமை முற்பகல் 7·58 வரை.

துதியை வைகறை 5.43 வரை.

நட்சத்திரம்: திருவோணம் முன் இரவு 7.49 வரை.

சுபநேரம்: 12.01-1.31

ராகுகாலம்: 7.31-9.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## கோழி நோய்க்கு புது மருந்து

சென்னை, ஜூலை 20

கோழிகளைக் கொல்லும் அபாயகரமான ''கைறோபெரிகாடியம் ஹபறைறற்றிஸ் சிம்ரம்'' எனப்படும் லீச்சி நோய்க்கான புதிய தடுப்பூசி மருந்தை சென்னையிலுள்ள தமிழ் நாடு கால் நடை சிகிச்சை மற்றும் விலங்கியல் பல்கலைக் கழகம்கண்டுபிடித்திருக்கிறது.

இந்த நோயினால் பீடிக்கப்பட்ட கோழிகளின் இதயம் லீச்சி பழம் போலாகி விடுவதால் இதை லீச்சிநோய் என்கிறார்கள்.

இந்தப் புதிய தடுப்பூசி மருந்து எதிர்வரும் 24 ஆம் திகதி சென்னையில் ஒரு நிகழ்ச்சியில் வெளியிடப்படும்.

முதலில் 1987 ஆம் 1988 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானில் கோழிகளுக்கு இந்த நோய் ஏற்பட்டது.

பின்னர் இறைச்சிக்கோழி அதிகமாக வளர்க்கப்படும் பஞ்சாப், ஹரியானா, டில்லி முதலான இந்திய வடமாநிலங்களிலும் இந்த நோய் பரவியது.

(இ-4)

## 2 பெண்களின் சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கொக்குவில் பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை சுடப்பட்டு உயிரிழந்த இனந்தெரியாத இரு இளம் பெண்களின் சடலங்கள் வெள்ளி மாலை 5-15 மணி அளவில் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

உடைகள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்ட நிலையிலேயே சடலங்கள் இரண்டும் காணப்பட்டன என்று தெரிய வந்தது.

சடலங்கள், பிரேத பரிசோதனைக்காகவும், மரண விசாரணைக்காகவும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன.

## புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் 85 சதவீதம் பூர்த்தியாகிவிட்டது

### அனுருத்த ரத்வத்தை தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் 85 சதவீதமான பகுதி பூர்த்தி செய்யப்பட்டு விட்டது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்த முனையில் தாக்குதல் நடத்தி வரும் இராணுவ வீரர்களின் பராக்கிரமத்தினாலும் அர்ப்பண சிந்தனையினாலுமே இந்த இலக்கை அடைய முடிந்தது என்றும் அவர் கூறினார்.

யுத்தம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும். அதற்கு செலவிடப்படும் பெருந்தொகைப் பணம் நாட்டின் வறிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் செலவிடப்படும் என்றும் அவர் சொன்னார்.

(இ-4)

## ஜே. 80 அ.அட்டை

யாழ்ப்பாணம், பெரியகடை ஜே 80 கிராமசேவையாளர் பிரிவுக்குரிய மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் 11:00 மணிக்கும் இடையில் ஆரியகுளம் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும். உரியவர்கள் குடும்பப் பதிவு அட்டையுடன் வருமாறு கோரப்பட்டுள்ளது.

## விளையாட்டுவிழா

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள பிறவுண் வீதி ஸ்ரீ விக்னேஸ்வரா ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் 5 ஆவது விளையாட்டு விழா இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

செல்வி இலங்கேஸ்வரி நவரத்தினத்தின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். பல்கலைக் கழக பதிவாளர் கலாநிதி க.குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் ந.சிவகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் கதிர்காம உற்சவத்தின் நிறைவாக நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

(ஐ-154)

★ ★ ★

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய ஆடிவேல் பவனி இன்று ஞாயிறு பி. ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆலயத்திலிருந்து புறப்படும் வேல் பவனி டச்சு வீதி ஹென்ஸ்மன் வீதி, பருத்தித்துறைவீதி, கண்டுவில்ஒழுங்கை ஊடாக மீண்டும் ஆலயத்தைச் சென்றடையும்.

★ ★ ★

அகிலஇலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் பன்னிரு திருமுறைகளுக்கான சோடச உபசார பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

★ ★ ★

நவாலி, ஜூலை 20

நவாலி கதிர்காம முருகன் ஆலயத்தின் தீர்த்தோற்சவம் நாளை திங்கள் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விழிப்பு மாநாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சினையும்!

## சுவிஸில் 28 ஆம் திகதி ஆரம்பமாகிறது

கொழும்பு, ஜுலை 20 சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ள சர்வதேச விழிப்பு (International Alert) மாநாட்டில் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச விழிப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த மாநாட்டில் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள், மனித உரிமைகள் நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் பல முக்கிய பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதுடில்லியில் நீண்டகாலம் இலங்கைத் தூதராக பணிபுரிந்த ஒருவர், இலங்கையில் இரண்டு பிரதமர்களுக்கும், ஜனாதிபதிக்கும் செயலாளராகப் பதவி வகித்த ஒருவர் மற்றும் ஐ. நாவுக்கான இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதி ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் கொழும்பில் வெளியாகியுள்ளன.

முன்னாள் இந்தியத் தூதர் ஜே. என். டிக்சிற், ஏபிரகாம் மற்றும் இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிகாக்கும் படையின் தளபதி ஜெனரல் கல்கத் ஆகியோரும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

(இ-ஐ-150)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**வல்லிபுரம் வள்ளியம்மை**

எமது உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின்
பிரதம ஆசிரியரான
திரு. ம. வ. கானமயில்நாதன் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி வல்லிபுரம் வள்ளியம்மை**

அவர்களின் மறைவு கேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் எமது பிரதம ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துகின்றோம்.

**நிர்வாகத்தினரும் ஊழியர்களும்**
**'உதயன்'**

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/1159)

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் வள்ளியம்மை

வட்டுக்கோட்டை மேற்கு, கண்ணகை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் மேற்குவீதி, 28 ஆம் இலக்கத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி வல்லிபுரம் வள்ளியம்மை நேற்று (19-7-97) நண்பகல் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மருதப்பு வல்லிபுரத்தின் (பிரபல மத்தள அண்ணாவியார்) அன்பு மனைவியும், கானமயில்நாதன் (பிரதம ஆசிரியர், உதயன் - சஞ்சீவி), திருமதி விமலாதேவி தயாநாதன், பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாரதாதேவி, வெற்றிவேலு தயாநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமியாரும், த. லோகதாசன் (யாழ் இந்துக்கல்லூரி- ஆண்டு 13-கணிதம்), தர்சினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி), கதிஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது நல்லூர் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (20-07-97) நண்பகல் 12 00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி மயானத்துக்கு நண்பகல் 1 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ம. வ. கானமயில்நாதன்
(மகன்)

28, கைலாசபிள்ளையார் கோயில்
மேற்கு வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி/1158)

மேலும் மரண அறிவித்தல்கள்
இரண்டாம் பக்கத்தில்

## கண்டனம்

இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களில் இருந்து இந்திய மீனவர்களைக் காப்பாற்றுவதில் மத்திய அரசு மெத்தனப் போக்கை தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாக அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ-5)

## கொக்குவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் துரையப்பா அரசரட்ணம் (வயது 58) என்பவரே படுகாயமடைந்தவராவார். (இ-15)

## பெண்கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வைக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தது.

போதிய இடவசதியின்றி கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை இக்குழுவினர் அவதானித்தனர்.

உணவு, தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் இன்றி கைதிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் குறித்தும் இக்குழுவினர் ஆராய்ந்தனர்.

கைதிகளின் பிரச்சினை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் நேற்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸுடன் தொடர்பு கொண்டதை அடுத்து அமைச்சர் கைதிகளின் கோரிக்கைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை பயங்கரவாதத்தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விசாரிக்க விசேட நீதி மன்றம் ஒன்று இரண்டு வாரங்களுக்குள் நிறுவப்படுவதுடன் அச்சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் வழக்குகள் துரிதப்படுத்தப்படும் எனவும் —

இவ்வழக்குகள் தொடர்பாக தமிழ் பேசும் சட்டத்தரணி ஒருவர் அரச தரப்பில் நியமிக்கப்படவுள்ளார் எனவும் — [illegible] பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-10-21)

## ஐரோப்பிய உதவி நிறுத்தம்

லண்டன், ஜுலை 20 கம்போடியாவுக்கான பொருளாதார, வர்த்தக உதவிகளை நிறுத்தி வைப்பது என ஐரோப்பிய நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது.

நாட்டில் மனித உரிமைகள் மீறப்படும் இடத்து உதவிகளை நிறுத்தி விடுவது என்ற ஒப்பந்த விதிகளுக்கு அமையவே கம்போடியாவுக்கான உதவிகள் நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியாவிலிருந்து வந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்த சிவனேசராசா ராஜ்குமார் (வயது-17), பேசாலையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ஜெகதீஸ்வரன் (வயது-20) ஆகிய மூவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

படகோட்டிகள் மூவரும் நீண்ட காலத்துக்கு முன்னரே இந்தியா சென்று அங்கு வசித்து வந்தவர்கள்.

அரியநாயகம் ஸ்ரீகாந்தன் வன்னியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக 3 மாதங்களுக்கு முன்னரே அகதியாக இந்தியா சென்றவர்.

சின்னத்துரை கிருபாகரன் இரண்டு மாதங்களுக்கு முன்னரே அகதியாக இந்தியா சென்றவர்.

இவர்கள் ஐவரும் தாக்குதல் காயங்களுடன் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் இந்தியாவில் இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் தங்கி இருந்த அகதிகளாவர்.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை, வன்னியைச் சேர்ந்த பிரஸ்தாப இரு இளைஞர்களும் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து மன்னார் இலுப்பைக் கடவையில் அகதிகளாகத் தங்கியிருக்கும் தமது பெற்றோரைப் பார்த்து முடியுமானால் அவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்லும் நோக்குடன் இராமேஸ்வரம் கரையில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட படகொன்றில் புறப்பட்டு வந்தனர்.

படகின் உரிமையாளர் படகை ஓட்ட மறுத்ததால், தம்முடன் மண்டபம் முகாமில் தங்கியிருந்த நண்பர்களான அகதி இளைஞர்கள் மூவரும் படகோட்டத் தெரிந்தவர்களாக இருந்ததால் அவர்களைப் படகு ஓட்டிகளாக அமர்த்தி மன்னார் இலுப்பைக்கடவையை நோக்கிப் புறப்பட்டனர்.

காற்று பலமாக வீசியதால் படகின் இயந்திரத்தை நிறுத்தி பாயின் உதவியுடன் படகைச் செலுத்தினார்கள்.

இரவுவேளை திசை தெரியாத நிலையில் படகு சென்று கொண்டிருந்தது.

இலுப்பைக்கடவைக்கென அவர்களால் செலுத்தப்பட்ட படகு காற்றினால் தலைமன்னார் பகுதியில் சென்று கொண்டிருந்தது.

காலை 7.00 மணியளவில் படகை இலுப்பைக்கடவைப் பக்கமாக திருப்ப முற்பட்ட வேளை கடற்படையினர் வந்து கொண்டிருந்தனர்.

கடற்படையினரின் படகு இவர்களை நெருங்கிய சமயம் இவர்கள் துணிகளை உயர்த்திக் காட்டி அபயக் குரல் எழுப்பினர்.

கடற்படையினர் சுடாது அருகில் வந்து படகுடன் தலைமன்னார் பாலத்துக்கு இவர்களை அழைத்துச் சென்றனர்.

பாலத்தில் படகை விட்டு இறங்கிய உடனேயே அங்கிருந்த பலரால் கம்பிகளாலும், பொல்லுகளாலும் அவர்கள் தாக்கப்பட்டனர்.

நண்பகல் அளவில் நெடுந்தீவுக் கடற்படையினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். நெடுந்தீவுக் கடற்படையினர் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஊர்காவற்றுறைக்கு அழைத்து வந்து அவர்களைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

சனிக்கிழமை காலை வரை ஊர்காவற்றுறைப் பொலீசில் இருந்த அவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது இவர்கள் ஐவரும் யாழ். ஆஸ்பத்திரியில் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-15)

## இராணுவ சாவடியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

னாருக்குச் செல்லும் பிரயாணிகளை உள்ளே எடுக்கும் சோதனைச் சாவடி உயிலங்குளம் சோதனைச் சாவடி ஆகும்.

இதனைத் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் பகுதியில் இருந்து மட்டுமே பொதுமக்கள் வவுனியா வர அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் — இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் இருந்து எவரும் உயிலங்குளம் ஊடாக மன்னாருக்கு வர அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட 9 கூலித் தொழிலாளர்களும் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து உயிலங்குளம் ஊடாக மன்னாருக்கு வரப் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-164)

## நெடுங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்)

— யாழ்ப்பாணம்), சிந்தனா (கனகலிங்கம் அஜந்தினி — யாழ்ப்பாணம்) ஆகியோர் களப்பலியானதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

53 ஆம் படையணியினர் நெடுங்கேணியில் இருந்து நொச்சிக்குளம், மஞ்சமடு ஆகிய இடங்களை நோக்கி நகர முற்பட்டபோது இந்த மோதல்கள் மூண்டது.

புலிகளின் தாக்குதல்களை படையினர் முறியடித்துவிட்டதாகவும் படையினரின் பதில் தாக்குதலின் போது பல புலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

அதே சமயம் படையினரின் ஷெல் தாக்குதலின் போது பொதுமக்கள் பலர் காயம் அடைந்ததாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (இ-4-5-10-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org